புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலயத்தோடு எமது கழக உறுப்பினர்களுக்கு நீண்ட காலமாக தொடர்பு இருந்ததும், அங்கு விவசாய ஆசிரியராக இருக்கும் திரும தி. ஆரணியின் ஆசிரியர் திருமதி. கருணாரூபிணியின் விவசாயத்தில் இருக்கும் அதீத ஆர்வம் காரணமாகவும் இந்த ஆண்டு இந்த வேலைத்திட்டம் செயல் வடிவம் பெற்றது.

ஏற்கனவே வேறொரு நலன் விரும்பிகளால் அன்பளிப்பாக வழங்கப்பட்டு, புயல் காரணமாக முற்றாகச் சேதமடைந்திருந்த GREEN HOUSE ஐ திருத்தித் தருமாறு அவர்கள் கேட்டதற்கு இணங்க, அதனை நாம் செய்து கொடுத்ததோடு மேலதிகமாக சில GROW BAG களையும் வழங்கினோம்.

நாம் மேற்படி உதவியைச் செய்து கொண்டு இருக்கும் போதே, இலங்கை அரசினால் நடாத்தப்பட்ட தொழில்முனைவுடன் கூடிய பாடசாலைத்தோட்டம் அமைக்கும் செயல்திட்டத்தில் புன்னாலைக்கட்டுவன் சித்தி விநாயகர் வித்தியாலய விவசாயக் குழு வெற்றி பெற்று, பரிசுத் தொகையாக 150,00.00 ரூபாய் ஐயும் தனதாக்கிக் கொண்டது எமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருகிறது. அதற்காக அவர்களுக்கு எமது வாழ்த்துகளைத் தெரிவிக்கும் அதேவேளை, இவ் வேலைத்திட்டத்திற்கு எம்மோடு சிறப்பாக ஒத்துழைத்து வரும் அதிபர் திரு. சிவகுமார் அவர்களுக்கு எமது நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.